செ.வெ.எண்:19 நாள்: 09.12.2022

<u>மயிலாடுதுறை மாவட்டத்தில் பிரதமரின் சுய தொழில் திட்டத்தின் கீழ் உணவுப் பொருட்கள் பதப்படுத்தும் தொழில் துவங்க மானியத்துடன் கடனுதவி பெற மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.இரா.லலிதா இ.ஆ.ப. அவர்கள் தகவல்</u>

மயிலாடுதுறை மாவட்டத்தில் மானியத்துடன் கூடிய சுயதொழில் கடனுதவி திட்டத்தின் கீழ் உணவு பொருட்கள் பதப்படுத்தும் தொழில் துவங்கவும், ஏற்கனவே நடத்தப்படும் குறுந்தொழில் நிறுவனங்களை விரிவாக்கம் மற்றும் தொழில் நுட்ப மேம்படுத்துதலுக்கு கடனுதவி பெறலாம்.

இத்திட்டத்தில் பழச்சாறு, பழக்கூழ் தயாரித்தல், ஊறுகாய் வற்றல், அரிசி ஆலை, உலர் மாவு, உணவு எண்ணெய் பிழிதல், மரச்செக்கு எண்ணெய், பேக்கிரி பொருட்கள், மசாலா பொருட்கள் தயாரித்தல், பால் பொருட்கள், இறைச்சி மற்றும் மீன் வகைகள் பதப்படுத்துதல் போன்றவற்றிற்கு பயன்படுத்தி கொள்ளலாம்.

ஒரு கோடி ரூபாய் வரையிலான திட்ட தொகை கொண்ட உணவு பதப்படுத்தும் தொழில் திட்டங்கள் உதவி பெறுவதற்கு தகுதி பெற்றவையாகும். திட்ட தொகையில் 10 சதவீதம் முதலீட்டாளர் தனது பங்காக செலுத்த வேண்டும். 90 சதவீதம் வங்கிகளால் பிணையமில்லாக் கடனாக வழங்கப்படும்.

அரசு 35 சதவீதம் மானியம் அதிகபட்சம் ரூ.10 லட்சம் வரை வழங்கும். உணவு பதப்படுத்தும் தொழிலில் ஈடுபடும் சுய உதவி குழுவினர் ஒவ்வொருவருக்கும் ரூ.40 ஆயிரம் வீதம் தொடக்க நிலை மூலதனமாக வழங்கப்படும்.

இத்திட்டத்தில் பயன்பெற **<u>pmfme.mofpi.gov.in</u>** என்ற இணையதளத்தில் விண்ணப்பத்தினை பதிவு செய்ய வேண்டும்.

தொழில் முனைவோர், தொழில் நிறுவனங்கள், சுய உதவிக்குழுக்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் மற்றும் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் பயன்பெறலாம். திட்டம் தொடர்பாக மேலும் விவரங்களை அறிந்து கொள்ள கச்சேரி சாலை, செந்தில் பைப் வளாகம், இரண்டாம் தளம், மாவட்ட தொழில் மையம் (போன் : 04364-212295) மயிலாடுதுறை அலுவலகத்தை அணுகி அறிந்து கொள்ளலாம். என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், மயிலாடுதுறை.